

# மறு சிந்தனை மலர....

டாக்டர் கலைஞர்

வெளியீடு :

தி. மு. க. தலைமை நிலையம்,
சென்னை-13.

மயிலை சிந்தனையாளர் மன்றத் துவக்க விழாவில்
தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பேருரை

விலை 30 காசு

சிந்தனை என்பது வேறு; நினைவு கொள்வது அல்லது நினைப்பது என்பது வேறு. நம்முடைய நணபர் வழக்கறிஞர் சிவாஜி அவர்கள் இங்கே பேசும்போது "தலைவர்களே, நண்பர்களே" என்று பேச்சை ஆரம்பித்தார். மற்றவர்களை எல்லாம் விளிக்காததற்கு அலட்சியமல்ல காரணம், அதைப்பற்றி அவர் நினைக்கவில்லை! நான் எல்லோருடைய பெயரையும் ஒழுங்குபடுத்தி இங்கே சொன்னதற்குக் காரணம், யார் யாருடைய பெயர்களைச் சொல்ல வேண்டுமென்று சிந்தித்துக் கொண்டேயிருந்து சொன்னேன். இது தான் நினைப்பதற்கும், சிந்திப்பதற்கும் உள்ள வித்தியாசம்.

நான் இப்படிச் சொல்வதால், நான் தான் சிந்தனையாளர்; சிவாஜி சிந்தனையாளர் அல்ல என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. சிந்தனையாளர்களுக்கே கூட மறதி வருவது சகஜம். எனவே நினைப்பும் மறதியும் ஒன்றுக்கொன்று முரண்பாடான உறவு கொண்டவைகள்; அந்த வகையில் நல்லமுறையில் நாம் சிந்திக்கவும்; நம்முடைய சிந்தனைகள் நமக்காக என்று அமையாமல் நாட்டிற்காக, சமுதாயத்திற்காக என்று அமைகின்ற தன்மையில் இருந்திடவும், அதற்கோர் நல்ல வடிவத்தினைத்

தந்திடவும் ஆகிய உயரிய குறிக்கோளோடு மயிலைப் பகுதியில் வாழ்கின்ற நம்முடைய நண்பர்கள் இந்தச் சிந்தனையாளர் மன்றத்தினைத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை வழங்குகிறேன்.

இந்த நல்ல விழாவில் டாக்டர் சேது அவர்களுக்கும் நாம் நம்முடைய வாழ்த்துக்களை, பாராட்டுக்களை வழங்கியிருக்கிறோம்.

என்னுடைய நண்பர் அன்புச் செழியன் அவர்கள் இங்கே ''நானும் சேதுவும் ஒரே வகுப்பு மாணவர்கள்; எனவே நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று அவர் பேசும்போது தன்னுடைய நட்பு உணர்வை இங்கே வெளியிட்டார்கள். அவர்கள் கல்லூரியில் படித்த வகுப்பைக் குறிப்பிட்டு, நாங்கள் இருவரும் ஒரே வகுப்பு என்று சொல்லியிருந்தாலும் கூட, இங்கே அமர்ந்திருக்கின்ற எங்கள் எல்லோரையும் பொறுத்தவரையில் நாங்கள் எல்லோரும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள் தான்; நான் வழக்கறிஞர் சிவாஜியையும் சேர்த்துச் சொல்வது தவறல்ல. ஏனென்றால் நான் இல்லாவிட்டாலும், வழக்கறிஞர் சிவாஜி அவர்களும், மாவட்டச்செயலாளர் சீதாபதி அவர்களும், மற்றவர்களும் ஒரே வகுப்பில் தான் ஓராண்டு காலம் சிறைச்சாலையில் 'மிசா' நேரத்தில் இருந்திருக்கிறார்கள். இப்படிப்பல்வேறு வகைகளில் ஒரே வகுப்பைச் சேர்ந்த நாம் மைலாப்பூரில் இந்த சிந்தனையாளர் மன்றத்தைத் தொடங்கி, அதனுடைய பணிகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

பல நண்பர்கள் இங்கே பேசும்போது அவர்களையும் அறியாமல் அரசியல் வாடை வீசத் தவறவில்லை. காரணம் தங்களை ஒரு அரசியல் இயக்கத்திற்கு ஒப்படைத்துக் கொண்டவர்கள் இத்தகைய பணிகளில் ஈடுபடும்போது அவர்களையும் அறியாமல் அந்த வாடை வீசுவது இயல்பே. அதற்கேற்ப நண்பர் காசிச்சாமி பேசும்போது ஆனாலும், நண்பர் ஆனந்தன் பேசும்போதானாலும், மற்றும் சில நண்பர்கள் பேசும்போதானாலும் மைலாப்பூரில் உள்ள சிலர் கருணாநிதியை—அவர் செய்த நல்ல செயல்களைச் சிந்திக்கத் தவறிவிட்டார்கள் என்றெல்லாம் குறிப்

பிட்டார்கள். அப்படிச் சிந்திக்கத் தவறிவிட்ட காரணத்திஞல், என்னைப்பற்றி நினைக்காமல் இருந்து விடுகிருர்களா? மறந்து விடுகிருர்களா? என்ருல், இல்லை என்பது தான் என்னுடைய வாதம். சிந்திக்கத் தவறிஞலும் அவர்கள் நிந்திக்கத் தவறவில்லை. எனவே சிந்திககும் போது எப்படி என்னுடைய நினைவு வருமோ அதைப் போலத்தான் நிந்திக்கும்போதும் என்னுடைய நினைவு அவர்களுடைய நெஞ்சில் அகலாமல் இருக்கும் என்பதால், சிந்தித்தாலும் நிந்தித்தாலும் நம்மை எண்ணி அல்லவா சிந்திக்கிருர்கள், நிந்திக்கிருர்கள் என்று எண்ணி நான் பெரு மகிழ்ச்சி அடையக் கூடியவன். எனவே இரண்டையும் ஒன்ருக எடுத்துக் கொள்ளக் கூடிய மனப் பக்குவத்தை என்னுடைய அரசியல் ஆசிரியர்களிடத்தில் நான் பெற்றிருக்கிறேன்.

இத்தகைய மன்றங்கள் அரசியலுக்கு மிக முக்கியமான இடத்தைத் தராமல் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற சீர்கேடுகளைப் போக்கவும், பொருளாதாரத் துறையில் ஏற்பட்டிருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும் பெரிதும் பயன்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காரணம், பொழுதெல்லாம் அரசியலில் நம்மை ஈடுபடுத்திக் கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கிருேம். மாலை நேரத்தில் நடைபெறுகின்ற பொதுக் கூட்டங்களாஞலும், ஏடு எடுத்து எழுதுகிருேம் என்ருலும் அல்லது ஆட்சி மன்றப் பணிகளை ஆற்றுகிருேம் என்ருலும், பொதுவாக இருக்கின்ற 24 மணி நேரத்தில் தூங்குகின்ற நேரம் போக மீதமுள்ள நேரத்தில் முக்கால் பகுதி நேரம், அரசியல் ஈடுபாடு உடையவர்கள் தங்களுடைய வாழ்க்கையை அதற்கே அர்ப்பணித்துக் கொண்டிருக்கிருேம். எனவே தான் அதிலே சில மணித்துளிகள் இத்தகைய காரியங்களுக்கு ஒதுக்கப்படுமேயாஞல், நேரடியாக நாம் அந்த இடங்களில் அரசியலைப் பேசாவிட்டாலும், அரசியல் என்பது மனிதனிடமிருந்து, ஒரு நாட்டுக் குடிமகனிடமிருந்து தனியாகப் பிரித்து எடுக்கப்பட்டு விடுவது அல்ல; திருவள்ளுவரே அரசியலைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிருர். எனவே அரசியல் என்பது கூடாத ஒன்று அல்ல. நான் குறிப்பிடுகின்ற அரசியல்; கட்சி அரசியல்; அந்தக் கட்சி அரசியலை நாம் இப்படிப்பட்ட மன்றங்களில் ஓரளவு

ஒதுக்கி வைத்துவிட்டு எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் இதுபோன்ற மன்றங்களில் இடம்பெறு கின்ற நிலையை உருவாக்கி, சமுதாயத் தொண்டினை—மக்கள் தொண்டினை—நாட்டுத் தொண்டினைக் கட்சிச் சார்பற்ற முறையில் நடத்த நாம் முன்வந்தாக வேண்டும். அப்படி முன்வருவோமேயானால் அரசியல் விழிப்புள்ள மக்களாக நாட்டு மக்களை நம்மால் உருவாக்க முடியும்.

இன்று நாட்டில் அரசியல் விழிப்பு உணர்ச்சி உள்ள மக்கள் எத்தனை பேர்? அரசியல் விழிப்பு உணர்ச்சி பெருதவர்கள் எத்தனை பேர்? என்று கணக்கெடுத்தால் அந்த உணர்ச்சியைப் பெருதவர்களின் தொகை தான் ஏராளம். நான் ஏதோ தேர்தலில் வாக்களித்த மக்களின் கணக்கை வைத்துச் சொல்வதாக யாரும் கருதக் கூடாது. பொதுவாகவே சொல்கிறேன். மற்ற நாடுகளைவிட—ஏன் இந்தியாவிலே உள்ள பல மாநிலங்களை விட—தமிழ் நாட்டில், அருகாமையில் இருக்கின்ற கேரளாவில் அரசியல் விழிப்பு அதிகம் என்று கருதிக் கொண்டிருக்கி ருேம். அது ஓரளவு உண்மையும் கூட. பொதுக்கூட்டங் கள் நடைபெற்று—அந்தப் பொதுக் கூட்டங்களிலே அரசியல் தொடர்புடைய பேச்சுக்கள் பேசப்பட—அதைக் கேட்பதற்கு ஆயிரக்கணக்கான, இலட்சக் கணக்கான மக்கள் கூடுகின்ற காட்சி. இந்தியாவிலேயே கிராமப் பகுதிகளிலும் கூட நடைபெறுகின்ற இடங்களாகத் தமிழ் நாடும், அடுத்தபடியாகக் கேரள மாநிலமும் திகழ்கிறது என்று சொன்னுல் அது மிகையாகாது. வேறு மாநிலங் களில் எங்கேயாவது பெரிய பட்டணங்களில் பெரிய மைதானங்களில் என்றைக்காவது ஒரு நாள் பெரும் தலைவர்கள் பேசுகின்ற கூட்டங்கள் நடத்திடக்கூடும். தமிழ்நாட்டைப் போல் பட்டிதொட்டியெல்லாம் அரசியல் பிரச்சாரங்கள் நடைபெறுகின்ற இடத்தை நாம் வேறு எங்கும் காண முடியாது. அந்த அளவிற்கு அரசியல் விளக்கங்கள், தங்களுடைய கட்சியின் கொள்கை பிரச் சாரங்கள் நடைபெற்றும்கூட மக்களிடம் இன்றைக்கு முழுமையான அரசியல் விழிப்பு ஏற்படவில்லை. அத் தகைய அரசியல் விழிப்புக்கு மக்களைத் தயார்படுத்த இத் தகைய சிந்தனையாளர் மன்றங்கள் தேவை. நான் மீண்டும் எச்சரிக்கையாகச் சொல்கிறேன். அந்த அரசி யல் விழிப்பு ஒரு கட்சி சார்புடைய அரசியல் விழிப்பு என்று

நான் இங்கே கூற விரும்பவில்லை. பொதுவான அரசியல் விழிப்பு ஏற்பட்டாகவேண்டும். அந்த அரசியல் விழிப்பு ஏற்பட்ட பிறகு தான் தாங்கள் எந்தக் கொள்கையுடைய அரசியல் கட்சியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற அந்த நிலைமையை மக்கள் பெற முடியும். அதற்கேற்ப முதலில் நாற்றங்காலில் பயிரை உருவாக்குவதைப் போல—நாற்றங்காலில் உருவான பயிரை எடுத்துப் போய் கழனியில் நடுவதைப்போல் இந்தச் சிந்தனையாளர் மன்றங்கள் எல்லாம் மக்களுடைய பகுத்தறிவைத் தட்டியெழுப்புகின்ற—தூண்டுகின்ற ஒரு அமைப்பாக உருவாகிட வேண்டும். அதற்கு இந்த மன்றங்களுடைய பணிகள் பயன்பட வேண்டுமென்று இந்த மன்ற நிர்வாகிகள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மயிலைப் பகுதியின் சிறப்புக்களை எல்லாம் வரவேற்புரையாற்றிய நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் அச்சடித்தே படித்துக் காட்டினார். அவர் அதைப் படிக்கும் போது 'இது வெறும் வாய்ப்பேச்சு அல்ல; எனவேதான் எழுதிப் படிக்கிறேன்' என்று சொன்னார். அப்படியானால் நாங்கள் பேசுவது எல்லாம் வெறும் வாய்ப்பேச்சு என்று நீங்கள் யாரும் கருதிவிடக் கூடாது. அதிலேயே (வரவேற்புரையிலேயே) அவர் குறிப்பிடுகிறார்: ''இந்த வரவேற்புரை வெறும் வாய்ப்பேச்சாக (எக்ஸ்டெம்போர் பேச்சாக) இல்லாமல் எழுத்துப் பேச்சாக (ரிட்டன் ஸ்பீச்) அமைய வேண்டுமென்று விரும்பியே இதனை நிகழ்த்த முன் வருகிறேன்'' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். ''எக்ஸ்டெம்போர் ஸ்பீச்'' என்பதற்கு வெறும் வாய்ப் பேச்சு என்று பொருள் நிச்சயம் இருக்க முடியாது. எக்ஸ்டெம்போர் ஸ்பீச் என்பது சொற்பொழிவு. எழுதிப் படிப்பதைச் சொற்பொழிவு என்று சொல்ல முடியாது. சொற்பொழிவு என்பது எந்த ஆதாரங்களையும் கையிலே வைத்துக் கொள்ளாமல்—நெஞ்சிலே வைத்துக் கொண்டு பேசுகின்ற அந்தப் பேச்சுத்தான் 'எக்ஸ்டெம்போர் ஸ்பீச்' —சொற்பொழிவு; அவர் இங்கே ஆற்றியது எழுதிப்படித்த பேச்சு; அச்சத்தின் காரணமாக—பேசும்போது எங்கே யாவது தடுமாறி விடுமோ, வார்த்தை தவறுதலாக வந்து விடுமோ, அது வேறு விளைவைத் தந்து விடுமோ, என்ற அச்சத்தின் காரணமாகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு எழுதிப் படித்த பேச்சாகும். ஆங்கிலத்தில்

உரையாற்றுமாறு என்னை யாராவது அழைத்தால் நான் எழுதித்தான் படிப்பேன். அதுதான் என்னுடைய நிலை. எனவே ஆதாரங்களை, மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கருத்துக்களை, நெஞ்சிலே பதிய வைத்துக் கொண்டு ஆற்றுகின்ற சொற்பொழிவைத்தான் 'எக்ஸ் டெம்போர் ஸ்பீச்' என்று சொல்லுகிறோம். அப்படிப்பட்ட 'எக்ஸ்டெம்போர் ஸ்பீச்'சை நம்முடைய நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் இங்கே ஆற்றுவிட்டாலும், அவர் எழுதிப்படித்த வரவேற்புரையில் இந்த மைலாப்பூரின் சிறப்பு அம்சங்களை எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்.

வள்ளுவர் பிறந்தது மைலாப்பூரில் தான் என்று சொல்லிவிட்டு--மதுரையில் பிறந்தார் என்றும் கூறுவார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் கேள்விக்குறிகளுக் கிடையிலேதான்—இந்த இரண்டு கருத்துக்களுக்கிடை யிலே தான் சிந்தனை பிறக்கிறது அந்தச் சிந்தனை தான் ஆராய்ச்சியாக வடிவெடுக்கிறது. அந்த ஆராய்ச்சி தான் இறுதியாகச் சில உண்மைகளை நாட்டிற்குத் தருகிறது. ஆனால் மயிலையா, மதுரையா என்ற சிந்தனையில் எழுந்த ஆராய்ச்சி இன்னும் முடிவடையவில்லை. மயிலாப்பூர்க் காரர்களைக் கேட்டால், அவர்களுடைய தன்னலம், 'இங்கே தான் பிறந்தார்' என்றும்—மதுரைக்காரர்களைக் கேட்டால் அவர்களுடைய தன்னலம் 'வள்ளுவர் மதுரையில்தான் பிறந்தார்' என்றும் கூறுவது வாடிக்கையாக இருக்கிறது. ஆனால் தமிழை வளர்ப்பதற்கான சங்கங்கள் கண்ட இடம் மதுரை என்கிற வரலாறும் இலக்கியங்களும் நமக்கு இருக்கின்ற நேரத்தில் முச்சங்கங்கள், தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று இருந்து தமிழ்ப் பணியாற்றி, தமிழை வளர்த்து, தமிழ்க் கொடியைப் புவன மெங்கும் கீர்த்தி ஒளி பரவிடத்தக்க அளவிற்குப் பறக்க விட்ட அந்தச் சங்கங்கள் இருந்த இடம் மதுரை மூதூர். இன்றைக்குள்ள மதுரையா? அது வேறு விவகாரம். நான் நிலப்பரப்பைத்தான் சொல்கிறேன் எத்தனையோ நில மாற்றங்களால் அதனுடைய உருவ அமைப்பு, பூமி அமைப்பு மாறுபட்டிருக்கலாம். எனினும் அந்தப் பகுதியில்தான் வள்ளுவர் இருந்திருக்க முடியும்; காரணம், அங்கேதான் தமிழ் செழித்துக் குலுங்கி வளர்ந்தது; அதற்கென சங்கங்கள் அங்கே இருந்தன என்பதை ல்லாம் எண்ணிடும்போது நாவலர் சோமசுந்தர

பாரதியார் ஒருகாலத்தில் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்திற்கு வலு ஏற்படுகிறது. வள்ளுவர் மதுரைப் பகுதியிலே தான் பிறந்திருக்க வேண்டும்; வாழ்ந்திருக்க வேண்டும்; என்ற கருத்துக்கு.

ஏன் மதுரையிலிருந்து சென்னைக்கு வந்திருக்கக் கூடாதா என்று எண்ணலாம். ஏதோ வள்ளுவர் ஒரு காலத்திலே மதுரை மாநகரத்திலே வாழ வழியில்லாமல் தவித்தவரைப் போலவும், சென்னையிலே வந்து குடிசை போட்டுக் கொண்டு வாழலாம் என்று எண்ணியவரைப் போலவும், அல்லது பட்டணம் பார்க்க வந்தார் அல்லது டிராம் வண்டி பார்க்க வந்தார் என்றெல்லாம் கால வழுக்கலில் நாம் இடறி விழக்கூடாது. சென்னை-மதுரை எத்தனை கல் தொலைவு? வள்ளுவர் காலத்தில் தமிழகத்தில் மக்கள் தொகை எவ்வளவு? அப்போது தமிழகம் என்றால் இன்றுள்ள எல்லை கூட அல்ல; இதை விட அதிகமான எல்லைப் பரப்பைக் கொண்டது. குறிப்பாக இன்றைக்குச் சொல்லப்படுகின்ற தென்னகம் முழுவதும் தமிழகம் என்று சொல்லக் கூடிய அந்தத் தமிழகத்தில் வள்ளுவர் காலத்தில் நான்கு அல்லது ஐந்து லட்சம் மக்கள் தான் இருந்திருக்க முடியும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தென்னகம் முழுவதும் அந்த நான்கைந்து இலட்சம் மக்கள் தான் இருந்தார்கள் என்ற நிலை மாறி இன்றைக்குத் தமிழ்நாட்டில் மாத்திரம் ஐந்து கோடியை எட்டிப் பிடிக்கக் கூடிய அளவிற்கு மக்கள் தொகையின் பெருக்கம் வளர்ந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழலில் வாய்ப்புக்கள், வசதிகள், இவைகள் எல்லாம் குறைவான அந்த நாட்களில் மதுரையிலிருந்து சென்னைக்கு வள்ளுவர் வந்தாரா இல்லையா என்ற கேள்விக்குக்கூட விடை காண்பது அவ்வளவு எளிதானதல்ல.

எனினும் வள்ளுவர் எல்லா இடத்திற்கும் வந்தார் என்று நாம் பெருமையோடு சொல்லிக் கொள்வது நமக்குப் பெருமையோ இல்லையோ, வள்ளுவருக்குப் பெருமையோ இல்லையோ வள்ளுவத்தைப் பரப்புகின்ற அந்தச் செயலுக்கு அது உறுதுணையாக அமைகிறது. வள்ளுவர் சென்னைக்கு மாத்திரமா வந்தார்? வள்ளுவர் இன்றைக்கு ருஷ்யாவிற்கும், அமெரிக்காவிற்கும், இங்கிலாந்திற்கும் போய் இருக்கிறார். வள்ளுவர் இன்றைக்கு உலகத்தில்

போகாத நாடு எது என்று கேட்டால் எதுவுமே இல்லை. அந்த அளவிற்கு வள்ளுவர் இன்றைக்கு உலக நாடுகள் அனைத்தும் பரவியிருக்கின்ற திருக்குறளை உலகத்திற்கு அளித்தவராக—நம்முடைய தமிழகத்திற்கு மாத்திரம் அளித்தார் என்று சொல்லக்கூடிய அளவிலே இல்லாமல்—பெருமைக்குரிய ஒரு பனுவலை வழங்கியவராவார். தமிழகத்திற்கு மாத்திரம் வள்ளுவர் குறளை அளிக்கவில்லை. 1330 அருங்குறட்பாக்களில் எந்த இடத்திலும் தமிழ், தமிழகம், தமிழர் என்கிற சொல்லை யாரும் காணமுடியாது. அப்படி அவர் சொல்லவில்லை. அந்தச் சொல்லைக் காண முடியவில்லை என்பதற்காக வள்ளுவரே தமிழர் அல்ல என யாராவது அவசரமாகச் சிந்தித்து விடுவார்களானல் அது ஆபத்தாகும். அவர் எழுதும்போதே, இது தமிழர்களுக்காக மாத்திரமல்ல ; இந்தத் தரணியிலே வாழ்கின்ற அத்தனை மக்களுக்காகவும் என்று தான் வள்ளுவர் குறளை யாத்திருக்கிருர். அதனுல்தான் இது பொது மறையாக—உலகப் பொதுமறையாக இன்று போற்றப்படுகின்ற அந்தப் பெருமையினை நாம் காண்கிருேம்.

இந்த மயிலைப் பகுதியில் சிந்தனைச் சிகரமாக விளங்கிய சிங்காரவேலரும் பிறந்தார், வாழ்ந்தார். என்னுடைய சிறு பிராயத்தில் தந்தை பெரியார் அவர்கள் நடத்திய பகுத்தறிவு ஏடுகளை நான் தொடர்ந்து படிப்பது உண்டு. அவர் வாரப்பத்திரிகையாகக் 'குடியரசு'ம், நாளேடாக 'விடுதலை'யும், மாத இதழாக 'பகுத்தறிவு' என்கிற புத்தகத்தையும் நடத்தி வந்தார்கள். அந்தப் பகுத்தறிவு இதழில் வெளியிடப்படுகின்ற சிறுகதைகள் எல்லாம் சிந்தனையை தூண்டிவிடுகின்ற கதைகளாகவே இருக்கும். சுவாமி கைவல்யம் அவர்கள் அதிலே எழுதிய கட்டுரைகள் எல்லாம் மூட நம்பிக்கைகளைத் தகர்த்தெறிகின்ற போர் வாட்களாக, சம்மட்டிகளாக இருக்கும். சிங்காரவேலர் அவர்கள் அவிழ்க்க முடியாத பல முடிச்சுக்களுக்கு அன்றைக்கு காரண காரிய விளக்கங்களோடு பதிலைக் கூறி, மூட நம்பிக்கையிலே ஆழ்ந்திருக்கின்றவர்களை எல்லாம், அதற்காக வக்காலத்து வாங்குகிறவர்களையெல்லாம் திகைப்படையச் செய்வார். நான் சிங்காரவேலருடைய கட்டுரைகள் ஏராளமானவற்றை என்னுடைய இளம் மாணவப் பருவத்திலேயே படித்திருக்கிறேன். அழகு நடை அல்ல ; ஆனல் ஆராய்ச்சி நடை ;

அறிவைத் தூண்டுகின்ற நடை. அப்படிப்பட்ட செழுமையான கருத்துக்கள் சிங்காரவேலர் அவர்களுடைய புரட்சிகரமான கட்டுரைகளிலே இடம் பெற்றிருந்தன. நொச்சிக் குப்பத்திலே பிறந்தார் என்று இங்கே குறிப்பிட்டார்கள். மீனவச் சமுதாயத்திலே பிறந்தவர்—இதைவிட மோசமாக அன்றைக்கு அழுத்தப்பட்டு, தாழ்த்தப்பட்டு, தலையெடுக்க முடியாமல் ஆண்டவன் பெயரால், மதத்தின் பெயரால், சாதியின் பெயரால், சம்பிரதாயங்களின் பெயரால், சாத்திரங்களின் பெயரால், நீ இப்படித்தான் வாழ வேண்டும், கடலை நம்பித்தான் வாழவேண்டும் என்று கட்டளையிடப்பட்டு—கட்டுமரத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருந்த அந்த சாதாரண சமுதாயத்தில் பிறந்து சீர்திருத்த செம்மலாக, தந்தை பெரியார் போன்றவர்கள் எல்லாம் தொடங்கிய பகுத்தறிவுப் பணிக்கு உற்ற துணைவராக மா. சிங்காரவேலர் அவர்கள் திகழ்ந்திருக்கிறார்கள். எனக்கு இன்னமும் பசுமையாக நினைவிருக்கிறது. எனக்குக் கூட இளம்பிராயத்திலேயே சுயமரியாதை எண்ணங்கள் என்னுடைய உணர்வுகளில் ஒன்றிக் கலந்து விட்டன என்றாலும் கூட, என்னுடைய வீட்டார், உற்றார், உறவினர், நெருங்கிய நண்பர்கள், அல்லது நண்பர்களுடைய பெற்றோர், என்னிடத்திலே கேட்கின்ற சில கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாமல் போய் விடுவது உண்டு. பேய், பிசாசு என்றெல்லாம் சில பேர்களைப் பிடித்தாட்டுகின்ற காட்சிகளைக் காளி கோவில் அல்லது மாரி கோவில் போன்றவைகளில் நான் இளம் வயதில் பார்த்திருக்கிறேன். இப்போது கூட பல இடங்களில் பார்க்கலாம். இப்போது அந்த மூட நம்பிக்கை நரபலி அளவிற்கு வளர்ந்திருப்பதையும் நாம் காண்கிறோம். அப்படி இந்த பேய், பூதம், பிசாசு இவைகளை எல்லாம் வெறும் கற்பனை, பொய் என்று இளைஞர்களோடு சேர்ந்து நான் வாதிட்ட நேரத்தில் சில பெரியவர்கள் கேட்பார்கள். "உனக்குத் தெரியுமா, பக்கத்து வீட்டிலே ஒரு பெண்மணியின் பெயரைச் சொல்லி அவருக்குப் பேய் பிடித்தது. அந்தப் பேய் திடீரென்று ஆங்கிலம் கூடப் பேசிற்று; சம்ஸ்கிருதமும் கூடப் பேசிற்று; ஆனால் அந்தப் பெண்ணுக்கு உண்மையிலேயே தமிழைத் தவிர வேறு எதுவும் தெரியாது; இருந்தாலும் பேய்பிடித்த பிறகு ஆங்கிலமும் சம்ஸ்கிருதமும் பேசியதுஎப்படி? எனவே பேய் என்பது வேறு; தனியாக இருந்து அவள் உடலில்

வந்து குடி புகுந்து கொண்டது; இதை ஒப்புக் கொள்கிருயா இல்லையா?'' என்று என்னைக் கேட்ட போது, நான் அப்போது உடனடியாக பதில் சொல்ல முடியாமல் திகைத்தேன். எனக்குக் கை கொடுத்தது சிங்காரவேலருடைய நீண்ட கட்டுரைதான்; சிங்காரவேலர் எழுதியிருக்கிருர்: "இப்படி சில நேரங்களில் ஒரு மொழி மாத்திரம் தெரிந்த சில பெண்டிர் மீது பேய் வந்ததாகக் கூறுவார்கள்; அவர்கள் தங்களுடைய வீட்டிலே பயிலாத, தெரிந்து கொள்ளாத மொழிகளைக்கூட சில நேரங்களில் ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்வார்கள்; அதை வைத்து இது பேய்தான் என்று உறுதிப்படுத்தக் கூடிய மூட நம்பிக்கையின் ஆதரவாளர்களும் சிலர் இருப்பார்கள்; அதற்கு என்னுடைய விளக்கம் இது தான் என்று சிங்காரவேலர் சொல்லுகிருர்.

"கிராமபோன் இசைத்தட்டுகளைப் பார்க்கிருேம். அந்த இசைத்தட்டுக்கள் ஒருவிதமான மெழுகால் செய்யப்பட்டவை; அந்த ஒருவிதமான மெழுகு அதன்மீது ஊசி படுகின்ற நேரத்திலே அதற்கு இடம் தந்து, அந்த ஊசியினுடைய கீறல்கள் விழுந்து, அதற்குப் பிறகு அந்த மெழுகு கெட்டியாகி இசைத்தட்டாக ஆகிறது. அதற்குப் பிறகு மீண்டும் நாம் அந்தக் கிராமபோன் இசைத்தட்டைக் கொண்டு வந்து இசைப்பெட்டியிலே வைத்து மீண்டும் அதிலே ஊசியை வைக்கும்போது எங்கெங்கு முதலில் ஊசி கிழிக்கப்பட்டதோ அங்கே அந்த ஊசி பதியும்போது கிழிக்கப்பட்ட நேரத்தில் பதிந்த அந்த ஒலிகள் எதிரொலிக்கின்றன. அது தான் கிராமபோன் சங்கீதம்; அதைப்போலத்தான் மனிதர்களுடைய மூளை கிராமபோன் ரிக்கார்டு செய்வதைப் போன்ற மெழுகு தன்மையில் உள்ள ஒரு பொருள். அதில் அவர்கள் கற்ற மொழி மாத்திரமல்ல; வெளியே போவோர், வருவோர் பேசுகின்ற மொழிகூட அவர்களை அறியாமல் செவிவழி நுழைந்து உள்ளே இருக்கின்ற அந்த மூளையின் சில செதில்களிலே பதிந்து விடுவது உண்டு. அப்படிப் பதிந்து விட்டவைகள். அவர்களுக்கு உடல் கோளாறுகள் நேர்ந்து நரம்பு தளர்ச்சியோ அல்லது நரம்பு பீடிப்போ, அல்லது மூளையிலே அதிர்ச்சியோ ஏற்பட்டு அதன் காரணமாக உடலில் ஒரு ஆவேசம் வருகின்ற நேரத்தில் எப்படி கிராமபோன் தட்டில் ஊசியை வைத்தால்

ஏற்கனவே பதிவான ஒலி வெளிக்கிளம்புகிறதோ அதைப் போல இந்த ஆவேச உணர்ச்சியால் ஏற்கனவே செவிவழி நுழைந்த வேறு மொழிகள் கூட வெளிக் கிளம்புகின்றன'' என்று சிங்காரவேலர் அழகான விளக்கத்தை அதற்குத் தந்திருந்தார்.

இப்படி, சிந்தனையின் விளைவால் நமக்குக் கிடைத்த சீர்திருத்த கருநூலங்கள் ஏராளம். ஆனால் இன்றைக்கு அடித்துக் கொண்டிருக்கின்ற அரசியல் அலையின் வேகத்தில் நாம் அவைகளை எல்லாம் படிக்கக் கூட நேரம் இல்லாமல் இருக்கிறோம் அவைகளை எல்லாம் படித்திட— படித்ததை மற்றவர்களோடு பகிர்ந்திட—நாம் நேரத்தை நிச்சயமாக உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்படிப் பட்ட சிந்தனைகள் தான் இந்தச் சமுதாயத்திற்கு நிரம்பத் தேவை.

உணர்ச்சி வேறு; நினைவு வேறு; எண்ணம் வேறு; சிந்தனை வேறு; சிந்தனையால் எழுகின்ற செயல்கள் வேறு; நினைவால் எழுகின்ற செயல்கள் வேறு; உணர்ச்சியால் எழுகின்ற செயல்கள் வேறு.

நண்பர் வழக்கறிஞர் சிவாஜி அவர்கள் இங்கே பேசும்போது, ''சின்னக் குழந்தை பிறந்தவுடன் சிந்திக்கிறது; சிந்திக்கின்ற காரணத்தினால் தான் அழுதால் பால் கிடைக்கும் என்று அழுகிறது; உடனே தாய் பால் தருகிறாள்'' என்று குறிப்பிட்டார். அவர் என்னை மன்னித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது சரியா இல்லையா என்று இரண்டு பேரும் சேர்ந்தே கூட சிந்திக்கலாம் ஏனென்றால் வாதங்களில் சிந்தனைகள் வளர்கின்றன. ஆனால் குழந்தைக்குப் பிறந்தவுடன் ஒரு குறிப்பிட்ட காலம்வரை உணர்ச்சிகள்தான் இருக்க முடியுமே தவிர, சிந்தனைகள் நிச்சயமாக இருக்க முடியாது. அந்தக் குழந்தை பிறக்கும்போதே சிந்தனை செய்வதற்கான கருவிகள் அந்த உடற்கூறிலே இருக்கின்றன. ஆனால் அதனைப் பயன்படுத்துகின்ற காலம் வேறு; உடனடியாக அல்ல; பசி என்பது ஒரு உணர்ச்சி; அதன் காரணமாகத்

தான் குழந்தை அழுகிறது. அந்த உணர்ச்சியைத் தாய் தன்னுடைய சிந்தனையின் மூலமாகத் தெரிந்து கொள்கிருள். ஆக, குழந்தையின் பசி உணர்ச்சி தாயின் சிந்தனையைக் கிளறுகிறது. தாய் பால் தருகிருள். குழந்தை பிழைக்கிறது. அதற்குப் பிறகு பிழைக்கிற குழந்தை வளர்ந்து வளர்ந்து, உலகத்தில் வேறு எந்தப் பிராணிக்கும் இல்லாத, வேறு விலங்கினங்களுக்கோ, பறவை இனங்களுக்கோ இல்லாத, மனித இனத்திற்கு என்று பிரத்தியேகமாக தரப்பட்டிருக்கின்ற பகுத்தறிவை அந்தக் குழந்தை பயன்படுத்தத் தொடங்குகிறது. அந்தப் பகுத்தறிவு பயன்படுத்துகின்ற நேரத்திலே தான் பகுத்தறிவு பண்ணையிலே, சிந்தனை எனும் நெல்மணிகள் குலுங்குகின்றன. ஆகவே பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும். அந்தப் பகுத்தறிவைப் பயன்படுத்துகின்ற மனிதர்கள் பலரும் அதைப் பலவிதமாகப் பயன்படுத்துகிருர்கள். அதைத்தான் ஆருவது அறிவு என்றுசொல்கின்ருேம். ஆருவது அறிவு ஒரு ஆண்டவனைத் தொழுகின்ற அறிவாகவும் செல்லலாம்; அல்லது பல ஆண்டவன்களை எல்லாம் தொழுகின்ற அறிவாகவும் செல்லலாம் ஆயிரக்கணக்கான கடவுள்களை எல்லாம் தொழுகின்ற அறிவாகவும் செல்லலாம். ஆனல் ஆயிரக் கணக்கான கடவுள்களை தொழுகின்ற அறிவைப்பற்றி நானல்ல; சுப்ரமணிய பாரதியார் என்ன சொன்ஞர்? ‘‘ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்று தேடி அலையும் அறிவிலிகாள்!’’ என்று சொல்கிருர். நீங்கள் ஏன் ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்று தேடி அலைகிறீர்கள்? உங்களுடைய உள்ளம்தான் தெய்வம்; அதுதான் கோயில்; அதுதான் ஆண்டவன் என்று கவிச்சக்கரவர்த்தி சுப்ரமணிய பாரதியார் உணர்த்தியதைத்தான் நான் இங்கே உணர்த்த விரும்புகிறேன்.

நான் கொள்கைக்கு வலு தேடுகின்ற காரணத்தால் சில எண்ணங்களுக்கு வலு தேடுகின்ற காரணத்தால்—பெரியாரையோ அல்லது அண்ணு அவர்களையோ அதற்குச் சாட்சிக்கு அழைத்தால் எப்போதும் அவர்கள் அப்படித்தானே சொல்வார்கள் என்று அலட்சியப் படுத்தி விடுவீர்கள்; எனவே தான் சுப்ரமணிய பாரதியாரை நான் துணைக்கு அழைத்தேன் ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்று தேடி அலையும்

அறிவிலிகாள் என்று எவ்வளவு அழுத்தந்திருத்தமாக பாரதியார் சொன்னார்? ஆனல் நாம் இன்றைக்கு ஆருவது அறிவை எத்தனை ஆண்டவர்கள் இருக்கிருர்கள் என்று தேடிப்பார்த்து அங்கெல்லாம் பயணம் செலுத்தத் தான் பயன்படுத்துகிருேமே யல்லாமல்—சரி, மைலாப் பூரில் அந்தத் தெருவில் இரண்டு கோயிலா? நம்முடைய தெருவில் இரண்டு கோவில் கட்டுவோம் என்று கட்டு கிருேமே அல்லாமல், மைலாப்பூர் முழுமைக்கும் ஒரு கபாலீஸ்வரர் கோயில் போதும் என்கிற அந்த நிலைகூட ஏற்படவில்லையே! எனவே தான் ஆருவது அறிவை நாம் பயன்படுத்துகின்ற விதத்தில் தான் ஒரு சமுதாயத் தில் ஏற்றம், தாழ்வு இவைகள் எல்லாம் அமைகின்றன. ஆருவது அறிவைப் பயன்படுத்தாத காரணத்தினுல் தான்—பயன்படுத்துவதே பாவம் என்று ஆண்டவன் பெயரால், சாஸ்திரங்களின் பெயரால் சொல்லி, அச் சுறுத்தப்பட்ட காரணத்தினுலே தான் இந்தச் சமுதாயத் திலே பெரும்பிரிவு மக்கள், நாயினும் கீழானவர்களாக, சில இடங்களில் நடமாட அருகதையற்றவர்களாக சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் பிரிக்கப்பட்டு விட்டோம். ஏன் எல்லோரும் ஆண்டவனின் பிள்ளைகள் தான்; ஆண்டவனின் படைப்புக்கள் தான், அதையும் சொல்கிறது வேதம். அதையும் சொல்கிறது உபநிஷத்; அதையும் சொல்கிறது சாத்திரம்; ஆனல் அதே வழி வந்த சாத்திர, சம்பிரதாயம் அப்படி ஆண்டவனுல் படைக்கப்பட்ட மனித சாதியில் இத்தனை பிரிவுகள் என்று சொல்கிறதே, ஏன்?

அந்த ஏன் என்ற கேள்வி எழ வேண்டும்; எப்படி என்ற கேள்வி எழ வேண்டும்; அதற்குத் தான் சாக்ரடீஸ் சொன்னுன், ''உன்னையே நீ அறிவாய்'' என்று! ஏன் என்று கேள்! என்று கூறினுன் இங்கர்சால்; உலகத்திலே ஒரு பகுதி மக்கள், அதிலும் தொகையில் மிகக் குறைவான வர்கள், ஆதிக்கப்புரிவாசிகளாகவும், இன்னொரு பெரும் பிரிவு தொழிலாள வர்க்கமாகவும், பாடுபடும் வர்க்கமாக வும் இருக்க வேண்டுமா? என்று எழுந்த கேள்வியின் முனைப்புத்தான்—அந்தச் சிந்தனையின் விளைவு தான் கார்ல்மார்க்ஸ். அந்தச் சிந்தனையும் செயலும் சேர்ந்த செயல்வடிவம் தான் புரட்சித் தலைவன் லெனின்! புத்தன் நோயாளியைக் கண்டான்; எதிரே தூக்கி வரும்

ԷԼ6



பிணத்தைப் பார்த்தான் ; இவைகள் எல்லாம் ஏன் நிகழ வேண்டும் என்று சிந்தித்தான் ; நான் அரண்மனையிலே வாழ்கிறேன் ; இந்த உலகத்தில் ஏழையெளியவர்களும் இருக்கிறார்களே எப்படி என்று தனக்குத் தானே கேட்டான். எனவே மாடமாளிகை, கூடகோபுரத்திலே இருந்து அதைப்பற்றி எண்ணிடமுடியாது ; எனவே போதிமரத்திற்குப் போகலாம் என்று சென்றான். சிந்தனையின் விளைவாகப் புத்தனைக் கண்டோம். சிந்தனையின் விளைவு தான் நமக்கு ஏசுநாதர் கிடைத்தார். நபிகள் நாயகம் கிடைத்தார். மகாவீரர் கிடைத்தார். ஆனால் அவர்களுடைய சிந்தனை ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குள் அடங்கலாம். தொடர்ந்து சிநதனையின் விளைவாகத் தான் ராஜாராம் மோகன்ராய் கிடைத்தார் ; சிந்தனையின் விளைவாகத்தான் பெரியார் ராமசாமி கிடைத்தார் ; சிந்தனையின் விளைவாகத் தான் அறிஞர் அண்ணா கிடைத்தார் ; அம்பேத்கார் கிடைத்தார் ; சிந்தனையின் விளைவாகத் தான் சிங்காரவேலர் கிடைத்தார் ; ஏன் தோழர் ஜீவாவும் கிடைத்தார். இப்படி சிந்தனையின் விளைவாக நமக்குக் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு, கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டுக் கிடைத்திருக்கின்ற நல்லோர் பலர் ; அப்படிக் கிடைத்தும் கூட நம்முடைய சமுதாயம், இன்றைக்கும், ''மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும்'' என்றாரே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அதைப்போல வழக்கத்தால் செக்கைச் சுற்றிக் கொண்டிருக்கின்ற மாடுகளைப் போலவே மனித சமுதாயம் இருப்பதா ? அது மாற வேண்டாமா ? அதற்கான சிந்தனை தேவையில்லையா ? அந்தத் தேவையை நாம் நிறைவு செய்ய வேண்டாமா ? நிறைவு செய்யத்தான் இந்த மன்றம் ; அதனுடைய பணி தொடருமாக என்று கூறி, நண்பர் டாக்டர் சேது அவர்களையும் பாராட்டுகிறேன்.

வி.பி.எஸ். அச்சகம் சென்னை-5